Registered as a Newspaper பக்கங்கள்: 6

விலை: ரூபா 5-00

பொது நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 25 11 - 12 - 94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 296

## உயர் கல்வித் தேவைகளை ஆராய உயர் அதிகாரிகள் குழு

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் உயர் கல்வித் தேவைகளை ஆராய கல்வி, உயர் கல்வி அமைச்சின் உயரதிகாரிகள் குழு ஒன்று 16-ம், 17-ம் திகதிகளில் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு விஜயம் செய்யவுள்ளது. இத்தகவலை வெளியிட்ட கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் உயர் கல்வித் தேவைகளில் உரிய கவனம் செலுத்தப்படும் எனவும், இது தொடர்பாக, கல்வியமைச்சு அதிக சிரத்தை காட்டி வருவதாகவும் தெரிவித்துள்ளார். இதேவேளை, வடக்கு - கிழக்கிலுள்ள பாடசாலைகளின் கல்விசார் செயற்பாடுகளோடு, ஏனைய சலுகைகளையும் மாணவர்களிடையே வளர்த்தெடுக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## விமான-ஹெலி கொள்வனவு; கேள்வி பத்திர கால எல்லை நீடிப்பு

### விளம்பரத்திலும் மாற்றம்

(கொழும்பு)

ஏழு போக்குவரத்து விமானங்களையும், ஆறு உலங்கு வானூர்திகளையும் கொள்வனவு செய்வதற்காக லேக்ஹவுஸ் பத்திரிகைகளில் வெளியான கேள்விப் பத்திரங்களின் கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் எழுந்த எதிர்ப்புக்களே இவ்வாறு கால எல்லை நீடிப்பதற்கான காரணம் எனவும் கூறப்படுகிறது.

அத்துடன் எம். 32 ரக விமானங்கள் அல்லது அதை ஒத்தவை எனவும், எம். 8, எம். ஐ. 17 ஆகிய உலங்கு வானூர்திகளும் அல்லது அதே போன்றவை எனவும் விளம்பரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இக் கேள்விப் பத்திரங்களுக்கான விண்ணப்ப முடிவு திகதி கடந்த செவ்வாய் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இது தற்போது அடுத்த 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஐந்து நட்சத்திர ஹோட்டல் அருகில் விமானப்படைத் தலைமையகம்

### வர்த்தகர்கள் பெரும் அதிர்ச்சி

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படைக்கு ஒரு புதிய தலைமையலுவலகம். கொழும்பு கோட்டையில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் அமைக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதற்கு கொழும்பு வர்த்தகர்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளதாக ஐலண்ட் நேற்றைய தனது தலைப்புச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

வர்த்தக கேந்திர நிலையமான கோட்டையில் இது அமைவதாலும் புதிய விமானப்படைத் தலைமையகம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாகரன் அனுப்பிய கடிதம்

# அரசாங்க-இராணுவ தரப்பு தீவிர பரிசீலனை

## அடுத்த கட்டம் குறித்தும் ஆராய்வு

(கொழும்பு)

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துவது பற்றியும் அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் சிறிலங்கா அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்த பதில் கடிதம் அரச, இராணுவ உயர் பீடங்களால் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துவது குறித்[...]

ஒன்றை அனுப்பியிருந்தமையும் அதற்கு பதிலளித்து நேற்று முன்தினம் தலைவர் பிரபாகரன் அவர்களால் கடி[...]

தலைவர் பிரபாகரனின் இக் கடிதம் சிறிலங்கா அரசியல், இராணுவ உயர்பீடங்களால் தீவிரமாக பரிசீலிக்கப்[...]

கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அரசாங்கம் அனுப்பியுள்ள கடிதத்திற்[...]

## வவு. கல்விப்பணிப்பாளரை இடமாற்ற வன்னிபாராளுமஉறுப்பினர்கோரிக்கை

### திணைக்கள ஊழியர். கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. நவரட்ணராஜாவை இடமாற்றம் செய்யும்படி வன்னிமாவட்ட ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள்[...]

[...]னியா கல்வி அதிகாரிகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே பெரும் பிரச்சினை எழுந்துள்ளது.

புளொட், பொதுஜன ஐக்கிய முன்னணி, முஸ்லிம் காங்[...]

கல்வி அமைச்சரைச் சந்தித்து வவுனியா கல்விப் பணிப்பாளரை வேறிடம் ஒன்றிற்கு இடமாற்றம் செய்யும்படி கோரியும் முஸ்லிம் ஒருவரை வவுனியா மாவட்டத்திற்கு[...]

தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துவது குறித்தும், அடுத்த கட்ட பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது பற்றியும் அண்மையில் தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தமையும் அதற்கு பதிலளித்து நேற்று முன்தினம் தலைவர் பிரபாகரன் அவர்களால் கடிதம் ஒன்று சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தினூடாககொழும்புக்கு அனுப்பப்பட்டமையும் தெரிந்ததே.

தலைவர் பிரபாகரனின் இக் கடிதம் சிறிலங்கா அரசியல், இராணுவ உயர்பீடங்களால் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி அரசாங்கம் சிந்தித்து வருவதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அரசாங்கம் அனுப்பியுள்ள கடிதத்திற்கு

( 6 ஆம் பக்கம் பார்க்க )

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. நவரட்ண ராஜாவை இடமாற்றம் செய்யும்படி வன்னிமாவட்ட ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக கல்வி அமைச்சரை கோரியுள்ளதையடுத்து வவுனியா கல்வி அதிகாரிகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே பெரும் பிரச்சினை எழுந்துள்ளது.

புளொட், பொதுஜன ஐக்கிய முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த ஐந்து எம். பிக்கள் கூட்டாக கல்வி அமைச்சரைச் சந்தித்து வவுனியா கல்விப் பணிப்பாளரை வேறிடம் ஒன்றிற்கு இடமாற்றம் செய்யும்படி கோரியும் முஸ்லிம் ஒருவரை வவுனியா மாவட்டத்திற்கு கல்வி அதிகாரியாக நியமனம்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# இராணுவ எல்லை முன்பாக மனித நடமாட்டமற்ற பகுதி

## அரசு - படையினர் தரப்பில் ஆராய்வு

இராணுவத்தினரின் பாதுகாப்பு எல்லைகளுக்கு முன்பாக மனித நடமாட்டமற்ற பகுதியை உருவாக்குவது பற்றி அரசாங்க தரப்பும், பாதுகாப்பு படையின் உயரதிகாரிகளும் ஆலோசனை நடத்தியுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக நடந்த உயர்பாதுகாப்பு மகாநாடொன்றில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்கா, இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வா, கடற்படைத் தளபதி மோகான் அமரசேகரா, பொலிஸ்மா அதிபர் பிராங் டீ சில்வா ஆகியோர் கலந்து கொண்டதாகவும் தெரிய வருகின்றது,

# ஆனையிறவு பாதை திறப்பதுபற்றி புலிகளுக்கு அரசு அறிவிக்கவில்லை

## - அனுருத்த ரத்வத்த

(கொழும்பு)

ஆனையிறவுப் பாதை திறப்பு புலிகளுடன் பேசியே முடிவெடுக்கப்படும். ஆனையிறவுப் பாதை திறப்பதுபற்றி புலிகளுக்கு அரசாங்கம் அறிவிக்கவில்லை. இப்பாதை புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இவ்வாறு பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் இது தொடர்பாக ஆராயப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# வங்காலையில்புலிகள்தாக்கு நான்கு ராணுவத்தினர் பலி

## காவலரண்கள், புலிகளால் அழிப்பு

(மன்னார்)

வங்காலையில் அமைந்துள்ள தொடர் இராணுவக் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் மூன்று இராணுவ காவலரண்களும் இரண்டு வீடுகளும் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டன விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இத்தாக்குதல் 5 நிமிடநேரமே நீடித்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை வங்காலையில் புலிகள் இராணுவக் காவலரண்களை தாக்கியழித்த சம்பவத்தை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்துள்ளன,

# எதிர்பாராத மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவு

யாழ் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட திடீர்மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட, மேஜர் பத்மகீர்த்தி/அசோகன் (பொன்னையா மோகனதாஸ் யாழ்ப்பாணம்) என்னும் போராளிக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இவரது திருஉருவப்படம் நாளை திங்கள காலை 10 மணிக்கு பளை சந்தை மைதானத்தில் வைக்கப்பட்டு இறுதி அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நாட்டப்படும்.



மேஜர் பத்மகீர்த்தி

# வங்காலை தாக்குதலில் 3 புலிகள் வீரச்சாவு

(மன்னார்)

நேற்று அதிகாலை வங்காலையில் இராணுவத் தொடர் காவலரண்கள மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவடைந்தபோராளிகளின் விபரம் வருமாறு,

[6ஆம் பக்கம் பார்க்க]

# பேச்சுவார்த்தைவிரைவில் ஆரம்பிக்கும் அமெரிக்காவிடம் சிறிலங்கா தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுடன் விரைவில் அரசாங்கம் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் என சிறிலங்கா பிரதி வெளியுறவு அமைச்சர் டி. பி. விக்கிரமசிங்கா, அமெரிக்க இராஜாங்க இலாகாவின் தென்னாசிய விவகாரங்களுக்கான பிரதி அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அமெரிக்க பிரதி அமைச்சரை, சிறிலங்கா பிரதி வெளியுறவு அமைச்சர் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் அமெரிக்காவுடனான சிறிலங்காவின் உறவின் முக்கியத்துவம் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## அம்பாறைத் தாக்குதலில்

# அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பலி

அம்பாறையில் கடந்த வியாழனன்று சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட 7 அதிரடிப்படையினரில் ஒருவர் ஊறணி அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரி எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வரி விளம்பரம்

## கோழி விற்பனை

பன்டம், பாமாஸ், பிறிமா சில்கி, கோழி, குஞ்சு விற்பனைக்கு உண்டு, விபரங்கட்கு க. வித்தியானந்தன், சம்மந்தப் பிள்ளையார் கோவிலடி, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை. (10327

## தையலாளர்கள் தேவை

பெண்களினதும், ஆண்களினதும் உடைகள் தைக்கக் கூடிய அனுபவமுள்ள தையலாளர்கள் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது. தொடர்பு :- ஜெகா தையலகம். 729, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம். (10337)

## ஆண்டு 5

ஆண்டு 5 (புலமைப்பரிசில் 1995) மாதிரி வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 11. 12. 94 ஞாயிறு வெளியிடப்படும். புதிய வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (10351)

## அறிவித்தல்

கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரசிங்கம் [நாவலப்பிட்டி] என்பவருடைய சாளி [CHALY] மோட்டார் சைக்கிள் வாங்கியவருக்கு அதற்குரிய முக்கிய ஆவணம் என்னிடம் இருப்பதால் தொடர்பு கொள்ளவும். 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். [10364]

## சைனா மகசீன்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் - வசந்தம் புத்தக நிலையம் [புதிய பஸ் நிலையம்] 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். [10360]

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லின அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு 698/15 சபாபதி வீதி, தலையாழி வயிரவர் கோயிலுக்கு அண்மையில் யாழ்ப்பாணம். (10346)

## மலிவு விலையில்

பாடசாலை உபகரணங்கள் கொப்பிவகைகள் 'கப்' மெழு

---

## சமையல் ஒரு கலை

அதனை நாங்கள் உங்களுக்கு நயமுடன் வழி சமைத்துத் தருகின்றோம். எங்களுடன் வந்து உங்கள் கீழைத்தேய, மேலைத்தேய உணவுகளை பகலிலோ அன்றி இரவிலோ பகிர்ந்து கொள்ளுங்கள்.

நிறைவான, சுகாதாரமான, சுவையான மனோரம்மிய சூழ்நிலையில் சமையலைச் சுவைக்க எங்களை சந்தியுங்கள்:

ஜோ. எகட்டனின்
உள்ளூர் விருந்தகம்
**ஜெசித்தாரா**
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி.

**நாங்கள் உங்கள் நாவிற்கு மேலும் சுவையூட்டுகின்றோம். எமக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை.**

(சி-10868) (ஜோ. செனித்)

---

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா வழங்கி வரும்**

வழமையான உணவுப் பார்சல்களை தடையின்றி தாமதமின்றி முற்பகல் 11. 45 மணி முதல் பிற்பகல் 3. 30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
விலை விபரம்:

மரக்கறி 30/-
இறைச்சி 35/-
மீன் 45/-

உணவுப் பொதிகளை உங்கள் சட்டைப் பைகளுக்கு ஏற்றவாறும் பொதிபண்ணித் தரப்படும்.
பதிவுகள் முன்கூட்டி ஏற்கப்படும்

**ஜோ. எகட்டனின்**

**ஜெசித்தாரா**
**(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை)**
**சுண்டுக்குளி**

எமக்கு வேறு கிளைகளோ முகவர்களோ இல்லை
புதுயுகத்தில் புது உருவம்
ஜெசித்தாரா (சி-10865)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி


**திரு. அன்ரனி குருஸ் சேவியர்**
(இளைப்பாறிய இலங்கை மத்தியவங்கி உத்தியோகத்தர்)
"உயிர் உள்ளவரை எம்மை நேசித்தீர்
மரணத்திலும் உம்மை நாம் மறவோம்"

தோற்றம்:- 15-12-1931 மறைவு 11-11-1994

ஆன்ம இளைப்பாற்றி திருப்பலி: கொழும்பு

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி பகர்வும்



திருமதி
**சிவக்கொழுந்து சுப்பிரமணியம்**

மண்ணில் 11-06-1948 விண்ணில் 11-11-1994


எமது தெய்வம் அம்மாவின் அந்தியேட்டி வைபவம் இன்று (11.12.1994) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் பங்கு கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரது இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டு எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எம்மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கண்ணன் இல்லம்
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேரன்
(9867)

---

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
8. 09. 1969

ஆண்டவன் மடியில்
11. 12. 1988

**வீரசிங்கம் சிவதாசன் (ராஜன்)**

பண்பிற் சிறந்தவனாய்
அன்பிற்கு இலக்கணமாய்
ஆண்டவனின் அடியவனாய்
உத்தமத்தில் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் அன்பு மகனே

உன் நினைவு என்றும்

---

## நினைவு கூருகின்றோம்...

## 11.12.1994

1987 ம்- ஆண்டு இதே தினத்தில் சுண்ணாகம் - மயிலணிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சங்கர் - விக்கி** (தங்கராசா விக்கினேஸ்வரராஜா -அம்மன் வீதி, உடுவில் வடக்கு - சுண்ணாகம்)

1988 -ம் ஆண்டு வந்தாறுமூலை - சிவத்த பாலம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கோண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். கெனடி** (சேகரம்பிள்ளை கஜேந்திரன் - கறுவாக்கேணி, வாழைச்சேனை - மட்டு)

யாழ் - காங்கேசன்துறை - மயிலிட்டிப் பகுதியில் தேசவிரோதிகளால் சுடப்பட்டு பலியான நாட்டுப் பற்றாளரான,

**பொன்னுத்துரை வண்ணக்கிளி** (முகுந்தன் வீரமாணிக்கதேவன்துறை - மயிலிட்டி)

1989 -ம் ஆண்டு மட்டு -தன்னாமுனைப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் றீகன்** (சின்னக்குட்டி கந்தசாமி - கோரக் கல்மடு, கிரான் - மட்டு)

**தோத்திரன் - சமுத்திரன்** (- தவநாயகம் முறக் கொட்டாஞ்சேனை - மட்டு)

1990 -ம் ஆண்டு ஊர்காவற்துறைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**லெப். கரிகரன்** (கார்த்திகேசு புலேந்திரன் - கெருடாவில் வடக்கு - சாவகச்சேரி)

1991 -ம் ஆண்டு மட்டு - சிவத்தபாலம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

மட்டு - அம்பாறை அரசியல் பொறுப்பாளரான,

**கப்டன் சத்துருக்கன்** (செல்லப்பா கிருபைராசா- -பொத்துவில் - அம்பாறை)

**மேஜர் வேணு** (பொன்னுத்துரை வேணுதாஸ் -திருமலை வீதி -மட்டு)

**பிரசாந்தன்** (கந்தசாமி சங்கர் -ஏறாவூர்- 04-மட்டு

**கண்ணாடிராஜா-பாண்டியன்** (பெரியபிள்ளை நடராஜா -இருதயபுரம் - மட்டு)

மன்னார் - மருதமடு - வேப்பங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மேஜர் தமிழ்ப்புலி - றிச்சாட்** (முத்துச்சாமி தர்மராசா - பெரியபுல்லுமலை . மட்டு)

**லெப். கிருபா** (அருளானந்தன் அமுதன் - தாராபுரம் - மன்னார்)

**புண்ணியன்-அல்போன்ஸ்** (சீமான் கிறிஸ்ரியன் தேவன்பிட்டி, வெள்ளாங்குளம் - மன்னார்)

**குமாரன்** (வேலுப்பிள்ளை சுகுமார் - செல்வபுரம், பூநகரி-மன்னார்)

**லெப். இனியன் - றஸ்கின்** (முத்தையா இராமசாமி - தூத்துக்குக்குடி, கன்னியாகுமரி - தமிழகம்)

1993ஆம் ஆண்டு முல்லைத்தீவுப்பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**தம்பித்துரை** (நாகேஸ்வரன் ஈஸ்வரன்-அளவெட்டி)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

கொப்பிவகைகள்'கப்' மெழு குதிரிபூச்சிகொல்லி(''இன்செக்ரிடஸ்ட்'') மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு தகுந்தகழிவு வழங்கப்படும். கண்ணன்-கீதை மக்கள் வங்கி முன்பாக ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [10354]

ஆன்ம இளைப்பாற்றி திருப்பலி: கொழும்பு கோட்டை புனித பிலிப்நேரியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
மரியநாயகி (நவம்)-மனைவி
யோலன்ட்)
பிரசாத் )(பிள்ளைகள்)

இல, 4, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(10358)

நவாலி வடக்கு
மானிப்பாய்.

உன் நினைவு என்றும்
எங்களை விட்டுஅகலாது
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.


(10356)

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-10889)

# 1-ம் ஆண்டு 2-ம் ஆண்டு நினைவஞ்சலிகள்





அமரர் திரு. **நாகலிங்கம் இராமலிங்கம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அமரர் திருமதி **இராசமணி இராமலிங்கம்**

12 - 01 - 1912 <-- மலர்வு --> 10 - 01 - 1914
22 - 11 - 1993 <-- உதிர்வு --> 22 - 12 - 1992

**திதி: 11 - 12 - 1994**

''மலர்மிசை ஏகினார் மானடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்''

எங்கள் நினைவில் நிலைத்திருக்கும்
உங்கள் முகங்கள் என்றென்றும் எங்கள்
உள்ளங்களில் பதிந்திருக்கும் உங்கள்
நினைவே எங்கள் இதயங்களை நிறைத்திருக்கும்

உங்கள் ஆத்ம சாந்திக்கு என்றும் எம்
கண்ணீர்ப் பிரார்த்தனைகள்

நா. அம்பிகைபாகன்
மடத்தடி லேன்,
கோண்டாவில் மேற்கு.

சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

(10352)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி இராமச்சந்திரன் ஜீவராணி
(அப்புக்குட்டி) (அம்மன்)

தோற்றம்: 2-09-1966
மறைவு: 23-11-1993

**திதி 12-12-1994**

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து எம்மை அன்போடும் பக்தியோடும் வளர்த்து நல்வழி காட்டி வாழ வைக்க வேணும் என்று இருந்த எங்கள் அம்மா அன்புத் தெய்வமே எங்களை மீளாத்துயரில் ஆழ்த்தி விண்சென்று விண்ணில் இருந்து எம்மைக் காக்கும் அம்மா, ஆண்டொன்று சென்றாலும் எங்கள் கண்ணில் உங்கள் புன்னகை தவழும் இனிய முகம் என்றும் எங்களை விட்டு நீங்காது மறையாது அம்மா, உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

திருவில்
ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
உங்கள் பாசம் அன்பால் பரிதவிக்கும்
கணவன், பிள்ளைகள்

(10333)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின்மடியில்
27-12-1973

தாயகமண்ணில்
02-12-1992

02-12-92 அன்று எங்கள் தமிழீழ மண்ணின் எல்லையிலே ஏறிவந்த எதிரிகளைத் துவம்சம் செய்து வெங்களமாடி வீரச்சாவடைந்த,

## லெப்டினன்ட் ஜெயா
**சண்முகராஜா-சிவகுமார் (தயா)**

**திதி:- 11-12-94**

தாய் மண்ணில் பிறந்தவனே; சிவகுமாரா
தலைவனின் வழியினில் தளராத உறுதியோடு
பயிற்சிப் பாசறையில் பயிற்சிகள் பல பெற்று
உன் அண்ணன் செல்லப்பெயராம்
ஜெயா என்ற பெயர் அதனை நீயே சுமந்துகொண்டு
லெப்டினன்ட் ஜெயாவாக நிலைத்தே நீ நின்றாய்
தாயக மண்தனிலே லெப்டினன்ட் ஜெயா!
என்பவனே

நீ பிறந்த மண்தனிலே
நீதியற்றவர்களை அழிக்கவென்று நீதியான
வழிதனிலே
நீ நிந்திச் சென்றாயே அடிபணிய மாட்டோமென்று
அந்நியரை அடக்கியவனே
நீ சிந்திய குருதியிலே நித்தமும் நாம் நனைந்து
தொடர்வோம் உன் பாதை!

அதே தினத்தில் வீரச்சாவடைந்த சக வீரவேங்கைகளுக்கும் இவ்வஞ்சலி சங்கமம்.

57, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை. (10347)

உன் பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.



## 17 வயதிற்குக் கீழ்ப்பட்டோர் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

# புனித ஹென்றியரசர் கல்லூரி வெற்றிக் கேடயத்தை வென்றது

யாழ்.மாவட்ட பாடசாலை விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட 17 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் கடந்த மாதம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் இடம் பெற்ற 3-ம் 4-ம் இடத்தை தெரிவு செய்வதற்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து அருணோதயாக் கல்லூரி மோதியது. ஆட்டத்தின் முதல் பாதியிலேயே மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் தமது முதல் கோலைப் பெற்றனர். அந்த ஒரு கோலையும் தமது அணிக்காக அணி வீரர் ஜூட்டன் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்து அருணோதயா கல்லூரி வீரர்களுக்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அதனை சரியாக பயன் படுத்த தவறி விட்டது அவர்களின் துரதிர்ஷ்டமே இவ்வணியின் வலதுபக்க முன்வரிசை வீரர் உதயசங்கர் மிகவும் திறமையாக ஆடியிருந்தார். ஆட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல் போடுவதற்கு மாறிமாறி எடுனற்று போயின. இறுதியில் 1-0 என்ற வகையில் வெற்றி பெற்று 3-ம் இடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரியினர் பெற்றுக் கொண்டனர். இவ்வாட்டத்திற்கு மத்தியஸ்தராக திரு. தம்பிராஜாவும், உதவி மத்தியஸ்தராக திருவாளர்கள் தனராஜரட்ணமும், அற்புதநாதனும் கடமையாற்றியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆரம்பித்த முதலாம் இடத்தைத் தெரிவதற்கான ஆட்டத்தில் உரும்பிராய் இந்து கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரி மோதியது. இவ்வாட்டம் ஆரம்பித்த போது ஆரம்ப 10 நிமிடங்கள் வரை பந்து உரும்பிராய் இந்துக்கல்லூரி அணியினர் பக்கமே இருந்ததுகுறிப்பிடத்தக்கதாகும். ஆட்டம் அரைப் பாதி வரை எவ்வணியும் கோல் எதுவும் பெறவில்லை. உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியினர் சார்பில் முன் வரிசை வீரர்கள் அருள், மாறன், விஸ்வநாத் போன்றோர் அனைவரும் பாராட்டதக்க வகையில்சிறப்பாகஆடியிருந்தனர்.

தொடர்ந்து இரண்டாவது அரைப்பாதி ஆரம்பி... கூடுதல் வீச்சுக் காட்ட தொடங்கினர். இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்தில் புனித ஹென்றியரசர் வீரர் சுரீன் கொண்டு வந்த பந்தினை நிறுத்தி நிதானமாக கோல் கம்பத்தின் இடது பக்க மூலைக்குள் செலுத்தி தமது அணிக்கு வெற்றியை தேடிதந்த அந்த ஒரு கோலையும் போட்டார்.

இதனைத் தொடர்ந்து இந்துக் கல்லூரி அணியினர் முழுப்பலத்துடன் ஆடத் தொடங்கினர், பிற்காப்பு வீரர் சிவறமணன் தனது நிலையினின்று முன்னேறி மிகவும் சிறப்பாக ஆடினார். ஆட்டம் முடிவுறும் வரை இரு பகுதியினரும் மேலதிக கோல் எதுவும் போடத்தவறியதால் 1-0 என்ற வகையில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியினர் 94ஆம் ஆண்டுமாவீரன் ராஜேந்தர் சுற்றுக் கிண்ணத்தை சுவீகரித்தனர். இறுதி வரை ரசிகர்களின் பரபரப்புக்குள்ளாகியசிறந்தொரு ஆட்டம் இதுவாகும். இவ்வாட்டத்திற்கு மத்தியஸ்தராக திரு. ஸ்கந்தகுமாரும் உதவி மத்தியஸ்தராக திரு. வித்தியாதரன், திரு. தம்பிராஜா அவர்களும் கடமையாற்றியிருந்...



17 வயதிற்குக்கீழ்ப்பட்ட புனித ஹென்றியரசர் கல்லூரி அணி
படம் - மணிவண்ணன்

# "கிடைத்த சந்தர்ப்பம் ஒன்றை சரியாக பயன்படுத்திக் கொண்டோம்"

## சம்பியன் பட்டம் வென்ற புனித ஹென்றியரசர் அணி

இவ்வருட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் 17, 19 வயதுப் பிரிவுகளில் வெற்றிவாகை சூடியவர்கள் புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை அணியினர் ஒரு மாலை வேளையில் அவர்களைச் சந்திக்க மானிப்பாயில் தற்போது பாடசாலை இயங்கும் இடத்திற்குச் சென்றிருந்தோம். எம்மை எதிர்பார்த்துக் காத்திருந்த, ஆசிரியர்கள், வீரர்களின் அட்டகாசமான வரவேற்பே மனதில் உற்சாகமான உணர்வை ஏற்படுத்தியது. அதிபர் கலாநிதி அருட் திரு. ஜஸ்டின் ஞானப்பிரகாசம் அவர்களிடம் சில வார்த்தைகள் பேசிவிட்டு வயது 17ம் பிரிவின் வீரர்களைச் சந்தித்தோம்.

சண்டிலிப்பாய் கோட்டத்திற்குட்பட்ட புனித. ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள் கோட்ட மட்டத்தில் நான்கு ஆட்டங்களில் பங்கு கொண்டு எட்டுப் புள்ளிகளுடன் முதன்மை பெற்றிருக்கிறார்கள். இவர்கள் மெமொரியல் கல்லூரி (3-0) சண்டிலிப்பாய் இந்து (3-1) மானிப்பாய் இந்து (2-1) என்று வென்றுள்ளார்கள். பண்டத்தரிப்பு இந்து ஆட்டத்துக்குச் சமுகமளிக்காமையால் அந்தப் புள்ளிகளும் இவர்களையேசேர்ந்தது.

இந்நிலையில் நேராக மாவட்டமட்ட விலகல்முறைப்போட்டிகளில் இவ்வணியினர்கலந்து கொள்கின்றார்கள்.

மாவட்ட நிலை ஆட்டங்களில் முதலில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியுடன் சந்திப்பு ஏற்படுகிறது. ஆரம்பத்தில் சாதகமற்ற கால நிலையால் பின்போடப்பட்டு, பின்னர் சந்தித்த ஆட்டத்தில் 1-0 என வெல்கிறார்கள். அடுத்து கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரியுடன் ஆட்டம் அமைகிறது. இங்கு சிறிது வசதியாக 3-1 என்று வெல்கிறார்கள். மூன்றாவது ஆட்டம் யூனியன் கல்லூரியுடனான சந்திப்பாக அமைகிறது. இது கால் இறுதியாட்டமும் ஆகும். முக்கியமான இவ்வாட்டம் 1-1 என்று சமநிலையில் முடியவே பெனால்டி மூலம் 7-6 என்று அடுத்தகட்டத்துக்குச் செல்கிறார்கள். அடுத்தகட்டம் அருணோதயாக் கல்லூரியுடன் அரையிறுதியாட்டம் இவ்வாட்டத்திலும் முன்பு போலவே 1-1 என்று சமன் செய்து ஆட்டம் முடிய 3-2 என்று பெனால்டி மூலம்வெல்கிறார்கள். இறுதியாட்டம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் உரும்பிராய் இந்துக் கல்லூரியுடன் அமை...

இறுதியாட்டத்தில் 1-0 என்றவாறு வென்று 17 வயதின் கீழ் இவ்வருட சம்பியன்களாகப் பெருமை பெறுகிறார்கள்.

உற்சாகமான வீரர்கள் கலகலப்பாக உரையாடினார்கள். தாம் சந்தித்த அணிகளில் யூனியன் கல்லூரி அணி, அருணோதயா அணி இரண்டும் சிறந்த அணிகள் என்று மனம் திறந்து கூறுகிறார்கள். இவர்களை இலகுவில் வென்றுவிட முடியவில்லை என்று கூறும் இவர்கள் யூனியன் கல்லூரி சிறப்பான கோல் காப்பாளரையும் பலமான பின்காப்பு வீரர்களையும் கொண்டிருந்ததென்றும் அருணோதயா சிற

நிர்மலன்

ந்த கோல்காப்பு வீரரையும் அருமையான முன் வரிசை வீரர்களையும் கொண்டமைந்திருந்தது என்று பாராட்டுகிறார்கள்.

உங்கள் இறுதியாட்டம் பற்றி என்ன கூறுகிறீர்கள் என்று கேட்டோம். உரும்பி...

அபாரமானது. எமது பின்காப்பு வீரர்கள் சமதையாக அவர்களைச்சமாளித்தார்கள் அவர்கள் முடிவுவரை நெருக்கிக் கொண்டேயிருந்தார்கள் அதேவேளை எமது முன்வரிசையும் திறமையும் பலமும் வாய்ந்தது. இதனால் கிடைத்த சில சந்தர்ப்பங்களில் ஒன்றைச்சரியாகப்பயன்படுத்திக்கொண்டோம் என்று கூறுகிறார்கள். தம் அபிப்பிராயப்படி உரும்பிராய் இந்துவின் அணித்தலைவர் மிகவும் சிறப்பாக விளையாடினார் என்று பாராட்டுகிறார்கள்.

மேலும் தம்வெற்றியில் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு ஒரு எதிர் பார்க்கை இருந்தது என்று பெருமிதமாகக் கூறி ரசிகர்களையும் தம்பக்கம் இழுத்துக்கொள்கிறார்கள்.

ரசிகர்கள் மத்தியில் புனித ஹென்றியரசர்வீரர்கள் பற்றி விசாரித்தபோது அவர்கள் திறமையானஒருஅணியினரே என்றும்உரும்பிராய் இந்துவும் இவர்களும்எமக்குகடைசிவிசில் வரைஅற்புதமானஒருஆட்டத்தைத்தந்தார்கள் என்கின்றார்கள். ரசிகரின்அபிப்பிராயத்தில் டனிஸ்டன், விஜயகுமார், நி.ஐங்கரன், ஜூட்ஜெமில்ராஜ் போன்ற வீரர்களை நட்சத்திர ஆட்டக்காரர்களாகக் குறிப்பிடலாம் என்கிறார்கள்.


கல்லூரி ஆசிரியர்கள் திரு. சு.லிங்கநாதன், திரு. க. குகதாஸ்ஆகியோரிடம்உரையாடினோம்''புனிதஹென்றியரசர் கல்லூரிக்கென ஒரு உதைபந்தாட்டப் பாரம்பரியமொன்று உண்டு. மைதான வசதிகள் குறைவு இருந்தும் மனோதைரியம் அதிகம். அதிபரின் உப அதிபரின் ஊக்கம் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பு என்பன குறிப்பிடத்தக்க விடயங்கள். அத்தோடு வீரர்களின் ஒழுங்கு, கட்டுப்பாடு, தீவிரமான தன்மை, எப்படியும் தமக்குத்தான் வெற்றிக்கிண்ணம் என்ற நம்பிக்கை இவை எல்லாம் சேர்ந்தே இவ்வெற்றிக் கிண்ணத்தை எமக்குத்தந்தன எமது பிள்ளைகள் இடம்பெயர்ந்து இருப்பவர்கள் அவர்களின் துன்பங்க

### கோல்காப்பு வீரர்
ஞா. சுதாகரன்
ஆ. ப. வசந்தன்

### பின்காப்பு வீரர்
பொ. றொபின் பெக்கின் (தலைவர்)
ப. பலஸ்டின்
இ. கிருபாகரன்
வே. ரவிகுமார் ஜோசப்
த. காண்டீபன்

### மத்தியவரிசை வீரர்
ம. டனிஸ்டன் விஜயகுமார் (உதவித்தலைவர்)
சி. விக்ரர் மரியதாஸ்
வே. ஜேம்ஸ் மைக்கல்
ஜெ. யூலியஸ் ஆனந்த்

### முன்வரிசை வீரர்கள்
நி. ஐங்கரன்
தெ. யோகதாஸ்
ப.ஜூட் ஜெமில்ராஜ்
யோ. டிலில் அரவிந்தன்
சூ. சுதன்



தார். ஆட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல் போடுவதற்கு மாறிமாறி எடுத்த முயற்சிகள் யாவும் பல

யில்சிறப்பாகஆடியிருந்தனா.

தொடர்ந்து இராண்டாவது அரைப்பாதி ஆரம்பித்த போது இரு அணியினரும்

மத்தியஸ்தராக திரு; வித்தியாதரன், திரு. தம்பிராஜா அவர்களும் கடமையாற்றியிருந்தனர்.



யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் உரும்பிராய் இந்துக் கல்லூரியுடன் அமைகிறது. மிகக் கடுமையான

உங்கள் இறுதியாட்டம் பற்றி என்ன கூறுகிறீர்கள் என்று கேட்டோம். உரும்பிராய் இந்துவின் முன் வரிசை

குத்தந்தன எமது ிள்ளைகள் இடம்பெயர்ந்து இருப்பவர்கள் அவர்களின் துன்பங்க

[4ஆம் பக்கம் பார்க்க)

# பலமான அணியாக உருவாகியுள்ள உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி

முன்பு பலமான அணிகளைக் கட்டியெழுப்பிய நாங்கள் இடையில் தொய்வுற்றிருந்தாலும் மீண்டும் இவ்வருடம் பலமான அணிகளைக் கட்டியெழுப்பியுள்ளோம். இறுதிப் போட்டிகளிலும் நாம் பலமான அணியென நிரூபித்துள்ளோம். சாம்பியன் பட்டம் தவறியது துரதிர்ஷ்டம்தான் என்று கூறுகிறார் உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. பசுபதி அவர்கள்.

94-ம் ஆண்டு 17 வயதிற்குட்பட்ட பாடசாலை மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் 2-ம் இடத்தை பெற்ற உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியினரை சந்தித்தவேளை இக்கருத்தை கூறினார் அவர்.

மூன்றாம் தவணையில் இறுதிநாட்களாக இருந்தும் கூட அதிபர், ஆசிரியர்கள் எமக்காக நேரம் ஒதுக்கித் தந்து மிக விருப்புடன் உரையாடினர்.

அணியினருடன் நாங்கள் தொடர்ந்து உரையாடிய போது கோப்பாய் கோட்டத்தில் நடந்த போட்டிகள் அனைத்திலும் வெற்றி பெற்று ஆறு புள்ளிகள் பெற்றுக் கொண்டோம், இதில் நாமே முதன்மை பெற்று அடுத்த கட்டத்தில் நான்கு அணிகளுக்குள் மீண்டும் முதன்மை பெற்றோம். தொடர்ந்த மாவட்டப் போட்டிகள் விலகல் முறையில் அமைந்தன. இதில் சுன்னாகம் மயிலணி ம. வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் ம. வித்தியாலயம் ஆகியோரை வெற்றி கண்டோம். அரையிறுதிப் போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் எமக்குமாக அமைந்தது. இறுதியாக புனித ஹென்றியரசர் கல்லூரியைச் சந்தித்தோம் என்றனர்.

மேலும் ஆசிரியர்களுடன் தொடர்ந்து உரையாடியபோதுஇவ்வணியின் பொறுப்பாசிரியர்களானதிருவாளர்கள் அ. மாசிலாமணி, ம. ஜெயராஜ் ஆகியோரின் பங்களிப்பினையும் புரிந்து கொள்ள முடிந்தது. அடுத்து அணி வீரர்கள் தம் கருத்தினை கூறியபோது, வெற்றி தோல்விக் கப்பால் இறுதிவரை நாங்கள் மிகவும் சிறப்பாகவே செய்துள்ளோம் என்ற திருப்தி எமக்குண்டு என்று கூறினார் கோல்காப்பு வீரர் தனுசன்.

இறுதிப் போட்டியில்கடைசி வரை சிறப்பாகவே விளையாடினோம். ஆட்டம் ஆரம்பித்து சுமார் 10 நிமிடங்கள் வரை பந்து எமது கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இருந்த போதும் சாம்பியன் பட்டம் கை நழுவி போனது துரதிர்ஷ்டவசமே என்கிறார்கள் அணிவீரர்கள் அருள்மாறன், கண்ணன், தனுசன், பிரதீஸ் போன்றோர்.

நீங்கள் சந்தித்த ஆட்டங்களில் மிகவும் இறுக்மாக அமைந்த ஆட்டம் பற்றி கேட்டபோது சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்துடன் ஆடிய ஆட்டமே மிகவும் சிறந்த ஆட்டமாகும். இவ்வாட்டம் இறுதியாட்டத்திற்கு சமமானது. சென். சள்ஸ்வீரர்கள் எமக்கு சவாலாக எல்லோருமே சிறப்பாக விளையாடினார்கள். நாம் இரு அணியினரும் கோல் எதுவும் போடாததினால் பனால்டி உதை மூலம் 4-2 கோல் வித்தியாசத்தில் வென்றோம்.

அடுத்ததாக சுன்னாகம் மயிலணி வித்தியாலயத்துடனான ஆட்டமும் சிறந்ததொரு ஆட்டமாகும் என்றனர்.

மேலும் அவர்கள் தொடர்கையில். நாங்கள் இறுதிப்போட்டிவரை முன்னேறியதற்க்கு காரணமாக இருந்தவர்கள் எமது பயிற்றுனர்கள் சின்ராசா அண்ணாவும் வெள்ளை அண்ணாவும். இவர்கள் எமக்கு சிறந்த முறையில் விளையாட்டு நுணுக்கங்களை கற்றுத்தந்து வழி நடத்தினார்கள். மற்றும் எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எமக்கு ஊக்கமளித்து ஆதரவு நல்கி எமது வளர்ச்சியில் பெரிதும் உதவியுள்ளனர். எமது பாடசாலை அபிமானிகள் ஊர் மக்களின் உதவிகள் ஒத்துழைப்பு எமக்கு பக்கபலமாகஅமைந்தன என்று கூறினர். தொடர்ந்துபயிற்றுனர் வெள்ளை பேசியபோது,

எமது வீரர்கள் மிகவும் பணிவன்பும்ஒழுக்கக் கட்டுப்பாடும் மிக்கவர்கள், எம்மை மதித்து சகல பயிற்சிகளை

**எஸ் தயாபரன்**

யும் மனம் கோணாமல் செய்து முடிப்பார்கள், எமது கல்லூரி, எமது அணி, நிச்சயம் நாம் வெற்றி பெற வேண்டும் என்ற மனஉறுதி ஒவ்வொரு வீரரிடமும் காணப்பட்டது. இதுவே அவர்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக அமைந்துள்ளது.

மேலும் எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எல்லா வகையிலும் எமக்கு பூரண ஒத்துழைப்புநல்கியிருந்தனர். அடுத்த வருடம் இவ்வணி இன்னும் வளர்ச்சியுற வேண்டும் அதற்கான பயிற்சியினை ஆரம்பித்துள்ளதாக கூறினார்.

பாடசாலை அதிபர் மிகுந்த வலைகளின் மத்தியிலும் ஒரு சில நிமிடம் எம்முடன் உரையாடினார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அணி வீரர்கள்

**கோல் காப்பாளர்**

ந. தனுசன்
து. கிரிகேஸ்வரன்

**பின் வரிசை**

பி. ரஞ்சித் ரிச்சாட்
யோ. நிக்கிலஸ் றோசான்
சி. சிவறமணன்
இ. ராஜ்குமார்

**மத்திய வரிசை**

தெ. சசிகரன்
த. கோகிலன்
த. மனோவதன்
சு. பிரபாகரன்
த. பிரசாத்

**முன் வரிசை**

செ. அருள்மாறன் (தலைவர்)
ந. விஸ்வநாத்
ோ. பிரதீஸ் (உபதலைவர்)
சி. பிரபாகரன்
த. றொபேட்சன்



17 வயதிற்குக் கீழ்ப்பட்ட உரும்பிராய் இந்துக்கல்லூரி அணி

# நியூசிலாந்துடன் முதலாவது டெஸ்டில் தென் ஆபிரிக்கா சோபிக்கத் தவறியது

ஒருபுறம்இங்கிலாந்து-அவுஸ்திரேலிய 'ஆஷஷ்' டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற, தென்னாபிரிக்காவில் இன்னொரு டெஸ்ட் தொடர் ஆரம்பமாகியுள்ளது. நியூசிலாந்து, தென் ஆபிரிக்க மூன்று டெஸ்ட் ஆட்டத்தொடரே அதுவாகும். முன்னதாக பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா கலந்துகொண்ட முத்தரப்பு ஒருநாள் சர்வதேசப்போட்டிகளில் தென்ஆபிரிக்கா தோல்விகளையே சந்தித்தது.

அதேபோன்று இந்தியா, மேற்கிந்தியா, நியூசிலாந்து மூன்றும் கலந்து கொண்ட ஒருநாள் போட்டித்தொடரிலும் நியூசிலாந்து தோல்விகளையே சந்தித்தது. இதைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுமே பலம் குன்றியதொரு மனநிலைக்குள்ளாகியிருந்தன

தென் ஆபிரிக்கா எதிர் பார்த்ததுபோல் மீண்டும் டெஸ்ட் உலகிற்கு வந்தபின் சோபிக்கவில்லை. இதற்கு நீண்டகால இடைவெளி காரணமாக இருக்கக்கூடும். அதே வேளை அண்மைய வருடங்களில் நியூசிலாந்தும் பலமான டெஸ்ட் அணியாக இல்லை. மார்டின் குரோ போன்ற ஒரு சில சர்வதேசத்தரம் வாய்ந்த வீரர்கள் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக பலம் குறைந்த அணியாகவே கருதப்படுகின்றது. கெட்லர் வெசல்ஸ் தலைமை வகித்த போதும்கூட அவரின் தலைமைத்துவ இறுதிக்காலத்தில் தென் ஆபிரிக்கா சிறப்பாகச் செய்ததாக இல்லை. தற்போதைய தலைவர் ஹன்சி குரொன்சியும் இத்தொடரிலேயே தன்னை நிரூபிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார் என்றால், நியூசிலாந்து அணித்தலைவர். கென் றுதர் போட்டும் அதே நிலையில் இருக்கிறார். இந்தப் பின்னணியிலேயே இவ்விரு நாடுகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி 25-ம் திகதி ஜோகானஸ்பேக்கில் ஆரம்பித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து முதலாவது நாள் ஆட்ட முடிவின் போது 242 ஓட்டங்களை பெற்று 4 இலக்குகளை இழந்துபலமானதொரு நிலையைப் பேணிக் கொண்டது. இருந்தும் 2-ம் நாள் மார்டின் குரோ 2 ஓட்டங்கள் மட்டும் பெற்று 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து 7 இலக்கு இழப்பிற்கு 280 என்ற நிலையில் நியூசிலாந்து சிறிது தளர்வடைந்தது. அதைத் தொடர்ந்து 8-வது இலக்குச் சோடியாக சேன். தொம்சனும் நாசும் சேர்ந்து 74 ஓட்டங்களைச்சேகரித்தனர்தொம்சன் பெற்றது84அதில் 15 நான்குகள் அடக்கம். ஆனால் மீண்டும் 8-ம், 9-ம் இலக்குகள் 354-ல் சரிய இறுதிச் சோடியான டோல், குறோன் இருவரும் 57 ஓட்டங்களைப் பெற்றனர். நியூசிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 411 ஓட்டங்களைப் பெற்றது. இவ்வெண்ணிக்கையில் பிளமின் பெற்ற 48ம் அணித்தலைவர் கென்றுதர் போட் பெற்ற 68ம் அடக்கம்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணியால்நியூசிலாந்துக்கெதிராகச் சவாலாக நின்று ஆட இயலவில்லை. 2-ம் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது இவர்கள் 4 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தார்கள். 3-ம்நாள் தொடர்ந்தாடிய தென் ஆபிரிக்க அணியினர் தொடர்ந்தும் தடுமாற்றத்துக்குள்ளாகியே இருந்தனர். இருந்தும் றிச்சர்ட்சன் பெற்ற 93 ஓட்டங்கள் இவர்களைச் சிறிது தலை நிமிர வைத்தது. எனினும் தெ. ஆபிரிக்க அணி 273 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. ஆனால் 2-வது இனிங்சை நியூசிலாந்து ஆரம்பித்த போது 147 ஓட்டங்கள் முன்னணியில் இருந்தாலும் கூட தென் ஆபிரிக்கா அருமையாக தன் அழுத்தத்தைக் கொடுத்தது. டி. விலர்ஸ் 9 பந்து வீச்சுகளில் 3 நியூசிலாந்து இலக்குகளை சரித்து தென் ஆபிரிக்காவிற்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்தார். 3-ம் நாள் முடிவடையும் போது நியூசிலாந்து 5/81 என்ற பாதகமானதொரு சூழ் நிலையிலேயே காணப்பட்டது.

4-ம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த

**நிர்மலன்**

நியூசிலாந்துஇச்சரிவில்இருந்து மீளமுடியவில்லை சீரான இடைவெளியில் இலக்குகள் சரிந்து கொண்டே இருந்தன· விலர்ஸ் 4 இலக்குகளையும் மத்தியூஸ் 5 இலக்குகளையும் சரிக்க 194 ஓட்டங்களுக்கு நியூசிலாந்து தன் சகல இலக்குகளையும் இழந்தது.

இந்நிலையில் 4-ம் நாளில் இறுதி வேளையில் வெற்றி பெற 327 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் தென் ஆபிரிக்கா தன் 2-வது இனிங்சை ஆரம்பித்தது. தோல் வியில் முடியக் கூடியதொரு ஆட்டத்தை சமமாக்க இயாலும் என்ற நம்பிக்கை தென்ஆபிரிக்காவிடம் நிறையவே இருந்தது. இருந்தும் ஆரம்பத்திலேயே இரண்டு இலக்குகளை இழந்த நிலையில் 4-ம் நாள் முடிவுற்றது. ஆனாலும் மக்மிலன், அணித்தலைவர் குரோன்ச் இருவரும் 42, 34 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காது நின்றனர். இது ஒரு நம்பிக்கையை தென் ஆபிரிக்காவிற்குக் கொடுத்திருக்கும் துரதிர்ஷ்டவசமாகஇறுதிநாள் ஆரம்பத்திலேயே மக் மிலன் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் தன் பங்குக்கு 62 ஓட்டங்கள் வரை பெற்றார். ஆனால் மறுபுறம் வேகப்பந்து வீச்சாளர் டோலும் சுழல்பந்து வீச்சாளர் காட்டும் மாறி மாறி இலக்குகளைச் சரிக்கவே 194 ஓட்டங்களுக்கு தென் ஆபிரிக்கா தன் சகல இலக்குகளையும் இழந்தது. இறுதி 8 இலக்குகள் 61 ஓட்டங்களுக்குச் சரிக்கப்பட்டது. நியூசிலாந்து தனது பெருமை மிக்க டெஸ்ட் வெற்றியொன்றை ஜோகானஸ்பேக் டெஸ்டில் 137 ஓட்டங்களால் பெற்றுக் கொண்டது டோலும், காட்டும் முறையே 4-5 என இலக்குகளைப் பகிர்ந்து கொண்டனர். டோல் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஒப்பீட்டளவில் தென் ஆபிரிக்கா நியூசிலாந்தைவிட பலமான அணி எனக் கருதப்பட்டாலும், இவ்வெற்றி அவர்களுக்கு ஒரு அதிர்ச்சியே எனினும் புதிய நியூசிலாந்து அணி தென் ஆபிரிக்க பிராந்திய ஆட்டங்களில் சிறப்பாகச் செய்ததுபோலவே, விட்டுக் கொடுக்காது டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றி கண்டு விட்டது தென் ஆபிரிக்கா தன் தாயகமண்ணில் அடுத்த இரண்டு டெஸ்ட்களிலும் என்ன செய்யப் போகிறது என்பதை அடுத்த வாரங்களிலேயே கண்டு கொள்ளமுடியும்.

## கிடைத்த

ளைச் சந்தோசமான வேளையில் உங்களுடன்பகிர்ந்து உங்களையும் துன்பப்படுத்த முயலவில்லை'' என்கிறார் ஆசிரியரும், நண்பருமான லிங்கநாதன். இடம்பெயர்வின் அவலங்களை எல்லோரும் நன்கறிவார்கள். அதன் துயரம் ஒவ்வொருவரின் மனதிலும் எப்போதும் இழையோடிக் கொண்டிருக்கும். ஆனால் இதையெல்லாம் மீறி சாதனை படைத்திருக்கிறார்கள். புனித ஹென்றியரசர் கல்லூரியின் 17 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட வீரர்கள், ஆசிரியர்களும், உப அதிபரும் நிறையவே விடயங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்கள். நம்பிக்கை, துன்பம், மகிழ்வென்று உணர்வுகள் மாறி மாறி ஓடிக் கொண்டிருந்தன. எல்லாவற்றையும் குறித்துக் கொண்டோம். எமக்காக எம்முடன் உரையாட 19 வயதுப்பிரிவின் வெற்றி வீரர்கள் காத்திருந்தார்கள். கல்லூரியில் நுழைந்தது முதல் வெளியேறும்வரை அங்குவீரர்களிடம்காணப்பட்ட ஒழுங்கமைப்பு மனதைத் தொட்டது இவ்வித ஒழுங்கமைந்த திட்டமிட்ட செயற்பாடுகள் தான் புனித. ஹென்றியரசர் கல்லூரியின் 17 வயதுக்கு உட்பட்ட மாணவரின் வெற்றியும், பெருமை மிகுந்த மாவீரன் ராஜேந்தர் வெற்றிக் கிண்ணம் அவர்களிடம் சென்றமைக்கான காரணமும் என்பதைப் புரிந்து கொண்டோம். நானும் தயாபரனும் இவர்கள் சளைக்காதவர்கள் என்ற உணர்வுடன் விடை பெற்றோம்.

## பலமான

இக் கல்லூரி அணிகளுக்கு பொறுப்பாக இருந்த ஆசிரியர்கள் எனது தேவை ஏற்படாத வண்ணம் தாங்களே முன்னின்று சிறப்பாக நடாத்தி முடித்திருக்கிறார்கள். அடுத்து எனது மாணவர்கள் சிறந்த முறையில் தமது திறமையினை வெளிப்படுத்தி கல்லூரிக்கு பெருமையை தேடித்தந்துள்ளனர்.

எமது கல்லூரிக்கு எல்லா விதத்திலும் ஒத்துழைப்பு நல்கி பயிற்றுனராக இருந்தவர்களுக்கும் பாடசாலை அணி சார்ந்த அபிமானிகள் ஆதரவாளர்களுக்கும் நன்றி கூறுகிறேன் என சுருக்கமாக தமது கருத்தினை கூறி முடித்தார்.

மேலும் இக் கல்லூரி வீரர்கள் ஆர்வம் குறையாது அடுத்த வருடத்திற்கு இப்போதே பயிற்சி பெறுகிறார்கள் இவர்கள் பயிற்றுனர்வெள்ளையின் பாணியில் விளையாட முற்படுவது எதிர்காலத்தில் நல்ல சிறந்த வீரர்களாய் திகழ வாய்ப்புண்டு நல்லதொரு காலைப் பொழுதினில் சிறந்ததொரு அணியை சந்தித்த திருப்தியில் அவர்களிடம் இருந்து மகிழ்ச்சியுடன் விடை பெற்றோம்.


**நம்பிக்கையின் சேவை**

ஜெசித்தாரா 85%ற்கு மேற்பட்ட சுவை விரும்பிகளின் நம்பிக்கையை பெற்றுள்ளது. காரணம், சுத்தம், தரம், நாணயம், யாழ். மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்று உங்கள் மங்கள நிகழ்வுகள், பிறந்தநாட் கொண்டாட்டங்கள், திருமண் வைபவங்கள், பிரியாவிடை நிகழ்வுகள் எதுவானாலும் உங்கள் இடத்திற்கே வந்து பரிமாறும் சேவை வழங்குவோம். அல்லது எங்கள் மண்டபத்தில் உங்களது நிகழ்வுகளை இனிதாக்கித் தருவோம்.

ஒருமுறை எம்மை அணுகுங்கள்

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகளோ அன்றி முகவர்களோ இல்லை.

புது யுகத்தில் புது உருவம்

(சி-10866) ஜெசித்தாரா.



**இதோ! அறிமுகப்படுத்துகிறோம்!**

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா வழங்கும்**

அன்டி - டன்ரி
நெய் புரியாணி (கோழி-ஆட்டிறைச்சி)
சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
பிற்பகல் 12. 00 மணி முதல் 3. 30மணிவரை
பெற்றுக் கொள்ளலாம்.

கோழி ரூபா 67. 50 மட்டுமே
ஆட்டிறைச்சி ரூபா 47. 50 மட்டுமே

ஏமாற்றத்தை தவிர்க்க முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

உங்கள் விருந்தகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
[முன் ஒழுங்கை]
சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

புது யுகத்தில் புது உருவம்

ஜெசித்தாரா

(சி-10867)



ரின்ஸோ பாவனையாளர்களுக்கோர் வரப்பிரசாதம்

மலரப்போகும் புத்தாண்டை முன்னிட்டு விசேட குறைந்த விலையில்!

## மலரப்போகும் புத்தாண்டை முன்னிட்டு விசேட கழிவு விலையில்!

கையிருப்பபோ
சொற்பம்
முந்துங்கள்!

# "ரின்ஸோ"

## இது லீவர் பிறதேர்ஸ் தயாரிப்பு

275g ரின்ஸோ தற்போதைய கொழும்பு விலை: 24 ரூபா
உங்களுக்கு கிடைக்கும் விசேட விலை: 21 ரூபா

வெண்மை தரும் ரின்ஸோவின் சில உண்மைகள்:

★ கழுவிய துணிகளின் நீடித்த நறுமணம் உங்களை சூழ்ந்துள்ளவர்களை மகிழ வைக்கிறது.
★ இல்லத்தரசிகளின் வேலைப் பளுவைக் குறைக்கின்றது.
★ துணி வகைகளுக்கு நீண்ட ஆயுளைத் தருகின்றது.
★ குறைந்தளவு ரின்ஸோவில் கூடுதலான துணிகளைக் கழுவி சிக்கனத்தை பேணிடலாம்.
★ பாவனையாளர்கள் பலரை தன்வசப்படுத்தி இலங்கையில் முன்னணி வகிக்கிறது.

விநியோகஸ்தர்கள்:

### சிறி விக்னேஸ்வரா களஞ்சியம்

இல: 148, கண்டி வீதி, சாவகச்சேரி.

கிளை:

### ராபா பன்முக வர்த்தகம்

104 A, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: இச்சலுகை 275g ரின்ஸோ பைக்கற்றுக்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

வியாபாரிகளுக்கு
விசேட கழிவு உண்டு

(10361)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்,



## சிந்தனைக்கு

மழை பெய்தமையை தனது சாதனை என்று வாதாடும் ஒரு கட்சி, வறட்சிக்கும் அதுவே பொறுப்பு என்று எதிரிகள் பழிக்கும் போது வியப்பு அடையக்கூடாது.

- ட்வைட் மாரோ -

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 125-2333 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## அக்கினிப்பரீட்சை

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கூறியது போன்றே ஆந்திர-கர்நாடக மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் அவருக்கு 'அக்கினி பரீட்சையாகவே' அமைந்து விட்டது. தேர்தலின் முன்னிலை கருத்துக் கணிப்புக்களையும் மீறியதான காங்கிரஸ் கட்சி படுதோல்விகளைச் சந்தித்துள்ளது,

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவராக பிரதமர் ராவ் இருந்தும்- தென்மாநிலங்களைச் சேர்ந்த லோக்சபா உறுப்பினர்களைப் பெருமளவில் கொண்ட அரசாங்கமாக காங்கிரஸ் அரசாங்கம் இருந்தும்- இரண்டு பெரும் தென் மாநில சட்டசபைத் தேர்தலில் கட்சி மண்கவ்வியதென்பது அக்கட்சிக்குப் பலமான அடி என்பதில் சந்தேகமில்லை.

இந்த வகையில் இச் சட்டசபைத் தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சி ஆட்சியின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்யும் என்பதிலும் ஐயமில்லை. ஏற்கனவேபல மாநிலங்களின் ஆட்சி காங்கிரஸின் கைகளில் இல்லை. இந்நிலையில், கைகளில் இருந்த இரு பெரிய மாநிலங்களின் ஆட்சி கைமாறுவதென்பது பெரிய அரசியல் பின்னடைவே ஆகும். இச்சூழ்நிலையில், காங்கிரஸ் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்ற கோஷம் எழுப்பப்படும்போது அதில் அர்த்தம் இருப்பதாகவே இருக்கும்.

இதேசமயம், காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டுள்ள தோல்வியானது பிரதமர் நரசிம்மராவிற்கு ஏற்பட்ட தனிப்பட்ட தோல்வி என்றே கொள்ள வேண்டும். பிரதமர் ராவ் தென்மாநிலத்தவர் என்பது மட்டுமல்ல, இத்தேர்தல் வெற்றியில் அவர் தனிப்பட்ட ரீதியில் அக்கறை கொண்டிருந்ததோடு, நேரடியாகவும் தேர்தல் வேலைகளை வழிநடத்தியும் இருந்தார்.

நரசிம்மராவ் இவ்வாறு கவனம் செலுத்தியமைக்கு இத்தேர்தல் முடிவு தனது அரசியல் வாழ்வையே ஆட்டம் காணச் செய்துவிடும்- சிலசமயம் அதற்கும் மேலாக அஸ்தமிக்கவே செய்துவிடும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். இந்நிலையில் தோல்வியைத் தவிர்க்க நரசிம்மராவ் பகிரத முயற்சியை எடுத்த போதும் அது தவிர்க்க முடியாது போய் விட்டது.

காங்கிரஸ் கட்சி சட்டசபைத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்ததற்கு பிரதான காரணிகளில் ஒன்றாக இருந்த உட்கட்சிப் பூசலே, தேர்தல் தோல்வியின் பின்னரும் நரசிம்மராவிற்கு எதிர்த்தரப்பினரைவிட சவாலாக இருக்கப் போகும் முக்கிய விடயமாகும். அதுவே அவரின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்...

# அரசின் நடவடிக்கை காரணமாக தமிழர்களின் சந்தேகம் வலுக்கிறது

### மட்டக்களப்பு மாவட்ட பா. உ.

(கொழும்பு)

திருமதிசந்திரிகா தலைமையிலான அரசின் போக்கின் காரணமாக தமிழ் மக்களின் மனதில் சந்தேகமும், பீதியும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராமகிருஷ்ண மிசன் பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், அரசாங்கம் சமர்ப்பித்துள்ள மினிபட்ஜட்டில் பாதுகாப்பு துறைக்கு அதிக நிதி ஒதுக்கி இருப்பது பிழையான ஒரு சமிக்கையாகும்.

வடக்கு - கிழக்கு போருக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவதால் கல்வி, சுகாதாரம் சமூக நல செலவுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதனால் மக்களின் அடிப்படை வசதிகள் மறுக்கப் படுகின்றன. அரசாங்கம் விரைவாக போரை நிறுத்தி பிரச்சினைக்கு தீர்வு காண முன்வரா விட்டால் எமது நிலையை மாற்றவும் தயங்க மாட்டோம் எனவும் தெரிவித்தார்.

### பாரிய ஆடைத் தொழிற்சாலை

## 7 யப்பானிய பணிப்பாளர் பெண் ஊழியரால் தடுப்பு

(கொழும்பு)

பாரிய ஆடைத் தயாரிப்பு தொழிற்சாலையின் பணிப்பாளர்களான ஜப்பானியர்கள் ஏழுபேர் அங்கு கடமையாற்றும் பெண் ஊழியர்களால் பணயமாகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

இத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களில் ஆறுபேர் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டதை ஆட்சேபித்தே இவ்வாறு பணயம் வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து இத் தொழிற்சாலையின் பணிப்பாளர்களான ஏழு பேரும் யப்பானுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

### உள்ளகப் பயிற்சி முடிக்காத

## மருத்துவ பட்டதாரிகளுக்கு தொழில் வழங்க முடிவு

[கொழும்பு]

உள்ளக பயிற்சிக்கான நியமனங்களை எதிர்பார்த்திருக்கும் எம்.பி.பி.எஸ். பட்டதாரிகளை வேலையிலீடுபடுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நியமனங்களை ஏற்க விரும்புவோர் எதிர்வரும் 13-ந் திகதி மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## சிலாபத்தில்243 மீனவருக்கு ரூ.318லட். நட்டஈடு வழங்கல்

(கொழும்பு)

சிலாபம் பகுதியை சேர்ந்த 243 கடற்தொழிலாளர்களுக்கு கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சு 318 லட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்கியுள்ளது.

சிலாபம் கடற்கரைப் பகுதியில் இறால் டோலிங் முறையின் கீழ் மீன் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்ததை தொடர்ந்து இம் மீனவர்கள் தொழில் எதுவும் இல்லாமல் இருந்தது தெரிந்ததே. புனர் வாழ்வு திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு 4500 ரூபா என்ற அடிப்படையில் 7500 ரூபா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் விரிவாக்கத்தின் அடிப்படையில் இந் நிதி பெறப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பெஸ்ரஸ் பெரேரா துப்பாக்கிகள் ஒப்படைப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பெஸ்ரஸ்பெரேரா தம் வசம் இருந்த துப்பாக்கிகளை பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளார். T- 56 ரகத் துப்பா... பெஸ்ரஸ் பெரேராவினால் வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கள்...

## விபத்தில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு வாகனங்களிற்கிடையில் விறகு வியாபாரி விபத்திற்குள்ளாகி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புத்தூர் கிழக்கு இ. ஜெயரூபன் (வயது 17) என்பவரே விபத்திற்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (இ)

## இலக்கிய பேரவையின் பரிசளிப்பு

யாழ். இலக்கிய வட்டத்தின்30-வது ஆண்டு நிறைவும் இலக்கியப் பேரவையின் சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழாவும் எதிர்வரும்சனிக்கிழமையன்று பிற்பகல் இரண்டு முப்பது மணியளவில் நாவலர் மண்டபத்தில் இடம் பெற உள்ளது. இந் நிகழ்வில் 1993-ல் வெளியிடப்பட்ட ஒன்பது நூல்களுக்கான பரிசளிப்பும் இடம்பெறவுள்ளது.

## மாவுடன் குமண வந்தது

(வடமராட்சி

திருகோணமலைக்கு மாவுக்குச் சென்ற 'குமண' கப்பல் நேற்று காலை ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் பருத்தித்துறைக்கு வந்தது.

கப்பல் வந்து சேர்ந்ததும் மா இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமாகியது.

## காட்டுமர வியாபாரி சுட்டுக்கொலை

### செட்டி குளத்தில் சம்பவம்

(வவுனியா)

ஆயுதம் தாங்கிய இனந் தெரியாத குழுவொன்று நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் காட்டுமர வியாபாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வவுனியா செட்டிகுளம் பகுதியில் நடைபெற்ற இத் துப்பாக்கிச்சூட்டுசம்பவத்தில் சரவணமுத்து குலேந்திரன் என்பவரே இவ்வாறு மரணமடைந்தவர் ஆவார். கடந்த புதனன்று செட்டி குளத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்த போது தாராபுரம் என்னுமிடத்திற்கு அருகே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் பதினாறாம் திகதிக்கு பின்னர் இப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இது பத்தாவது என்பது குறிப்பிடத்தக்கது.

## வதிவிட வேளாண்மை விண்ணப்பம் பெற வசதி

1994-95காலப்பகுதிக்குரிய வதிவிடவேளாண்மை போட்டிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் இம் முறையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்பாக கிராமிய உற்பத்திக்குழு அலுவலகங்களிலும், கிராமசேவையாளர் அலுவலகங்களிலும், கமநல சேவை நிலையங்களிலும், அரச-அரசசார்பற்ற நிறுவனங்களிலும் விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி அவற்றை அதே அலுவலகங்களில் நேரடியாக கையளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்படுகிறது.

## 120வருடத்தில் இல்லாதளவு வெள்ளம் மட்டக்களப்பில்

கடவத்தமடு, வாழைச்சேனை, சித்தாண்டி, கும்புறுமூலை, வந்தாறுமூலை, செங்கலடி, ஏறாவூர் சத்துருக்கொண்டான், கல்லடிபோன்ற இடங்களில் மூன்று அடிக்கும் மேற்பட்ட வெள்ளம் தேங்கி நிற்பதாகத் தெரிய வருகின்றது. களுவாஞ்சிக்குடி, ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, வாகரை, பட்டிப்பளை, வவுணதீவு, வெல்லாவெளி, காத்தான்குடி ஆரையம்பதி போன்ற பிரதேச செயலகப் பிரதேசங்களிலும் மட்டக்களப்பு நகரினுள்ளும் பல கிராமங்கள் வெள்ளக் காடுபோல காட்சி அளிக்கிறது எனவும் தெரியவருகின்றது.

கடந்த 120 வருடங்களில் இம்முறையே அதிகளவுமழை பெய்திருப்பதாகவும், இவ் வருடத்தில் இதுவரையில் 2830 மில்லி மீற்றர் மழை மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்திருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

## மேல்மாகாண ஆளுநராக ஸ்ரான்லி திலகரத்தினா?

(கொழும்பு)

மேல்மாகாண ஆளுநராக ஸ்ரான்லி திலகரத்தினா நியமிக்கப்படலாம் என நம்பகரமாகத் தெரியவருகின்றது. இவ்வாறு கொழும்பிலிருந்து வெளிவரும் ஐலன்ட்நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஸ்ரான்லி திலகரத்தினா சபாநாயகராகவும் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### யாழ். பிராந்திய சுகாதாரசேவை;

## பதில் பணிப்பாளராக டாக்டர் சிவகுரு நியமனம்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளராகடாக்டர் சிவகுரு நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படிபணிப்பாளர் பதவியில் கடமையாற்றிய டாக்டர் இரத்தினசபாபதி அவர்கள் ஓய்வு பெற்றதைத்... ளது தெரிந்ததே. அவர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து டாக்டர் விவேகானந்தன் பதில் பணிப்பாளராக இதுவரை கடமையாற்றி வந்தார்.

இப்பதவிக்கு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி...

சந்தித்ததற்கு பிரதான காரணங்களில் ஒன்றாக இருந்த உட்கட்சிப் பூசலே, தேர்தல் தோல்வியின் பின்னரும் நரசிம்மராவிற்கு எதிர்த்தரப்பினரைவிட சவாலாக இருக்கப் போகும் முக்கிய விடயமாகும். அதுவே அவரின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் அம்சமாகவும் இருக்கும்.

நரசிம்மராவ் பிரதமர் பொறுப்பையும், கட்சித் தலைமைப் பொறுப்பையும் ஏற்றபோதும் அவர் பல சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஆனால் அன்று காங்கிரஸ் வடக்கில் படுதோல்வியைச் சந்தித்திருந்தமையால், தெற்கைச் சேர்ந்தவர்களுடன் இணைந்து எதிர்ப்பாளர்களை வெற்றி கொள்ள வைத்தது. நரசிம்மராவிற்கு முக்கிய தலைவலியாக இருந்த அர்ஜுன்சிங்கையும், சரத்பவாரையும் ஓரம் கட்ட முடிந்தது. அன்று சோனியாகாந்தியும் அரசியலில் இருந்து பெரும்பாலும் ஒதுங்கியிருந்ததால் சாத்தியமாகியிருந்தது.

ஆனால், இன்றைய அரசியற் சூழ்நிலை சற்று மாற்றம் கண்டுள்ளது, வ க்கில் 1991இல் கட்சி சந்தித்த தோல்வியில் இருந்து கட்சி மீளாது விட்டாலும், அன்றைய நிலையை விடச் சற்று உயர்வான நிலையிலேயே உள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் வடக்கில் நான்கு மாநிலங்களில் நடைபெற்ற சட்ட சபைக்கான தேர்தலில் எதிர்த்தரப்பினரிடம் இருந்து இரு மாநிலங்களை காங்கிரஸ் கைப்பற்றிக் கொண்டது. அதிலும் குறிப்பாக மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் பெற்ற வெற்றியானது ராவின் முக்கிய எதிராளியான அர்ஜுன்சிங்கின் கையைப் பலப்படுத்தியுள்ளது.

அதேசமயம் ராஜீவ்காந்தியின் மனைவியானசோனியா காந்தியின் நடவடிக்கைகள் அவர் அரசியலில் பிரவேசிக்கலாம் என்பதனை வெளிக்காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள். இந்நிலையில் காங்கிரஸிற்குள் உள்ள ராஜீவ் ஆதரவாளர்களும் புத்துயிர்ப்புப் பெற்றுள்ளார்கள் என்றே கருதப்படுகின்றது. இது ராவ் எதிர்ப்பாளர்களை ஒட்டுமொத்தமாகப் பலப்படுத்தியுள்ளது என்றே கூறலாம்.

இந்தநிலையில் முன்னர் இருந்த தென் மாநிலங்களின் ஆதரவும் இழந்த நிலையில் நரசிம்மராவ் பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளார் என்றே கூறலாம். இந்நிலையானது, காங்கிரஸ் கட்சிக்குள் அவர் இதுவரை கொண்டிருந்த பிடியைத் தளர்வடையச் செய்யக் கூடும். பிரதமர் பதவியைத் தான் அவர் துறக்க வேண்டி வராது விட்டாலும் காங்கிரஸ் தலைமைப் பதவியையாவது துறக்க வேண்டி வரலாம். ஏற்கனவே இரு பதவிகளையும் ஒருவர் வைத்திருப்பது பற்றி காங்கிரஸிற்குள் பலமான கருத்து மோதல்கள் உண்டு. இன்றைய நரசிம்மராவின் பலவீனமான நிலை இதைமேலும் தீவிரமாக்கி அவரின் அதிகாரத்தைக் குறைக்கலாம். இந்த வகையில் இச் சட்டசபைத் தேர்தல் தோல்வியானது பிரதமர் நரசிம்மராவிற்கு ஒரு அக்கினிப்பரீட்சையல்ல. பல அக்கினிப் பரீட்சைகளின் ஆரம்பம் என்றே கூற வேண்டும்.

---

பாராளுமன்ற உறுப்பினருமான பெஸ்ரஸ்பெரேரா தம் வசம் இருந்த துப்பாக்கிகளை பொலிசாரிடம் ஒப்படைத்துஉள்ளார். T-56 ரகத் துப்பாக்கிகள் ஐந்து, சிறிய ரக இயந்திரத் துப்பாக்கி ஒன்று மற்றும் மூன்று றிப்பீட்டர் ரகத் துப்பாக்கிகள் என்பனவே முன்னாள் அமைச்சர் யத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்றஉறுப்பினர்களுக்குவழங்கப்பட்டிருந்த ஆயுதங்களை மீளஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்து இருந்தது தெரிந்ததே.

## பாப்பரசர் வருகை முன்னிட்டு காலிமுகத்திடல்புனரமைப்பு

(கொழும்பு)

பாப்பரசர் புனித இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் வருகையை முன்னிட்டு கொழும்பு காலிமுகத்திடல் பகுதியை துரிதமாகப் புனரமைக்கும்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்க திருச்சபையின் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் எதிர்வரும் 20-ம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்ய இருப்பது தெரிந்ததே. இருநாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் பாப்பரசர் காலிமுகத்திடலில்ஆராதனை நடத்த இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ராவின் இதயத்தில் கட்டி விரைவில் அறுவைச்சிகிச்சை

### இந்தியப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு இதயத்தில் கட்டி ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு இடையில் அவர் அமெரிக்காவில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள இருப்பதாகவும் இந்தியாவின் ஆங்கில இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் டைம்ஸ் ஆப் இந்தியாவின் இச் செய்தி தவறானது எனவும், பிரதமர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும், உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

## கல்லடியில்கைக்குண்டுவீச்சு; பொலிஸ் அதிகாரி காயம்

கல்லடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கிரனைட் குண்டுகள் வீசப்பட்டதில் படுகாயத்துக்கு இலக்கானார்.

கடந்தவியாழனன்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் டபிள்யூ. டி. பத்மகுமார என்ற பெயருடைய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரே படுகாயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களான விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தோரென சந்தேகிக்கப்படும் ஒருவர் இக் கைக்குண்டுகளை வீசியதாகக் கூறப்படுகின்றது. இத்தாக்குதலின் பின்னர் அவர் தப்பிவிட்டார் எனவும் தெரியவருகிறது.

---

பருத்தித்துறைக்கு வந்தது.

கப்பல் வந்து சேர்ந்ததும் மா இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமாகியது. அதே சமயம் 'மாகோ' கப்பலில் இருந்து மண்ணெண்ணெய்பரல்கள் துரிதமாக இறக்கப்பட்டன. கோமாரி கப்பல் காங்கேசன்துறையில் தரித்து நிற்கிறது. (யோ)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபையினரால் வீதிகளில் காணப்படும் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. நாய்கடிக்கு வீதியால் செல்வோர் பலர் இலக்காகி வருவதையடுத்து கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. (யோ)

## மூட்டைப்பூச்சிகளால் நோயாளர் அவதி

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதர வைத்தியசாலையில் நோயாளிகளின் வார்ட்டுகளில் மூட்டைப்பூச்சித்தொல்லை அதிகரித்துள்ளதாக நோயாளிகள் தெரிவித்தனர்.

வார்ட்டுக்களில் இருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள் மூட்டைப்பூச்சியின் கடி தாங்க முடியாமல் வேதனைப்படுவதாகவும் மேலும் தெரிவித்தனர். (யோ)

## சடலம் கரைஒதுங்கியது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் செம்பியன்பற்று கடற்பகுதியில்பெண் ஒருவரின் சடலம் கடந்த வெள்ளி கரை ஒதுங்கியது.

இச்சடலத்தை நாகர்கோயில் காவல்துறையினர் மீட்டனர். 40 வயதுடைய இப்பெண் மனநோயாளி எனவும் குடும்பஸ்தரான இவர் கற்கோவளத்தைச் சேர்ந்தவரெனவும் பின்னர் அடையாளம் காணப்பட்டார். (யோ)

---

யில் கடமையாற்றிய டாக்டர் இரத்தினசபாபதி அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து காலியாக உள்

## விளையாட்டு மைதானம் புனரமைப்பு

யாழ். பல்கலைக்கழக புதிய விளையாட்டு மைதானம் நூறு மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதியை பெறுவதற்காக நாம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவைக் கோரியுள்ளோம் என யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் திரு. சி. தியாகராஜா தெரிவித்துள்ளார்

யாழ். பல்கலைக்கழகம் கடந்த காலங்களோடு ஒப்பிடுமிடத்து பல்வேறு விளையாட்டு துறைகளிலும் முன்னணியில் திகழுகின்றது இவ்வாறான காலகட்டத்தில் நாம் விளையாட்டுத்துறையை முன்னெடுத்துச்செல்லக்கூடிய சகலவழிகளிலும் நாம் மாணவர்களுக்கு இனிவரும் காலங்களில் ஒத்துழைப்பு நல்குவோம் என மேலும் தெரிவித்தார். (05)

## மினி ஒலிம்பிக்கிற்கு ஏற்பாடு

மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ''மினி ஒலிம்பிக்'' போட்டிக்கு யாழ் பல்கலைக்கழகம் தயாராகி வருகிறது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களும் பங்குபற்றும் 'மினி ஒலிம்பிக்' போட்டி அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

1990-91 கல்வியாண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மினி ஒலிம்பிக் போட்டியில் யாழ்பல்கலைக்கழக அணி உதைபந்தாட்ட அணி சம்பியனாகி தங்கப் பதக்கங்களை பெற்றுக் கொண்டது தெரிந்ததே.

---

தார்.

இப்பதவிக்கு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியாக இருக்கும் டாக்டர் சிறீகாந்தா சுகாதார அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதம் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இருந்து வரும்வரை மலேரியா தடுப்பியக்கப் பொறுப்பாளர் டாக்டர் சிவகுரு அவர்கள் பதில் பணிப்பாளராகக் கடமையாற்றுவார் என தெரியவந்துள்ளது. (சி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-12 1**

**ஞாயிறு இரவு**

08.01- இசையரங்கம்- நிகழ்ச்சியில் எஸ். பாலசிங்கம் அவர்களின் ஹார்மோனிய வாத்தியக் கச்சேரி

08.30- செய்திகள்

08.40- தொடர்நாடகம்- பொன். கணேசமூர்த்தி எழுதும் 'இலங்கை மண்' 50-ம் அங்கம்

09.00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994-12-12**

**திங்கள் காலை**

07.02- மாவீரவணக்கம்

07.15- நீங்கள் கேட்டவை

07.30- செய்திகள்

07.35- பத்திரிகைச் செய்திகள்

07.40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08.00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# ஆந்திராவில் காங்கிரஸ் படுதோல்வி
# கர்நாடகத்தில் கட்சிக்கு மூன்றாமிடம்
## கோவாவில் மட்டும் முன்னணி; சிக்கிமிலும் தோல்வி

(டில்லி)

கர்நாடக சட்டப்பேரவை தொகுதி தேர்தல் முடிவுகளின் படி இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளில் ஜனதா தள் 114 இடங்களை கைப்பற்றி முன்னணியில் நிற்கிறது. காங்கிரஸ் கட்சி 36 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. பாரதிய ஜனதா 40 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

மாநிலத்தின் முதலமைச்சர் வீரப்பமொய்லி தர்கலா தொகுதியில் வெற்றிபெற்றுள்ளார். எனினும் டல அமைச்சர்கள் தோல்வி கண்டுள்ளார். காங்கிரஸிலிருந்து பிரிந்துசென்று தனிகட்சி அமைத்து போட்டியிட்ட முன்னாள் முதலமைச்சர் பங்காரப்பா ஷோரத் தொகுதியில் வெற்றி பெற்றார் மற்றோர் தொகுதியான சாகரில் இவர் தோல்வியுற்றார்.

ஆந்திராவில் முடிவுகள் அறிவிக்கப்பட்ட தொகுதிகளில் தெலுங்கு தேசம்219 இடங்களை கைப்பற்றியது. இது ஆட்சியமைக்கும் நிலையில் உள்ளது. காங்கிரஸ் 19 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் 16 இடங்களிலும் மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் 12 இடங்களிலும் பாரதிய ஜனதா ஒரு தொகுதியிலும் வெற்றிபெற்றுள்ளன.

ஆந்திர முதலமைச்சராக என்.டி.ராமராவ் நாளை திங்கள் பதவி ஏற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

சிக்கிம் மாநில 33இடங்களுக்கான தேர்தலில் சிக்கிம் ஜனநாயக முன்னணி பெரும்பான்மைஇடங்களைபெற்றது காங்கிரஸ் ஒரு இடத்தை மட்டுமே பிடித்தது.

கோவா மாநிலத்தில் காங்கிரசிற்கு 17 இடங்களும் மகாராஷ்டிரவாதி கோமந் கட்சிக்கு 16இடங்களும் பாரதிய ஜனதாவுக்கு 2 இடமும் கிடைத்துள்ளன.

# காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் ராவ் மீது நம்பிக்கைத் தீர்மானம்

(டில்லி)

அண்மையில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில் படுதோல்வி கண்டுள்ள இந்திரா காங்கிரசின் செயற்குழு நேற்று அவசரமாக கூடியது பிரதமர் நரசிம்மராவ் மீது தமக்கு நம்பிக்கை இருப்பதாக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

இத் தோல்விகளை தொடர்ந்து கட்சிக்குள் பெரும் பூசல்கள் எழலாம் எனக் கூறப்படுகின்றது. இதனிடையே காங்கிரஸ் தேர்தல் தோல்விகளுக்கு பொறுப்பேற்று ஆட்சியை விட்டு விலகி பொதுதேர்தலை நடத்த முன்வரவேண்டும் என எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாவின் அட்டல் பிஹாரி வாஜ்பாய் கோரிக்கை விடுத்துள்ளார்.

## அம்புலன்ஸில்நோயாளரை ஏற்றிவர பணம் வசூலிப்பு

(யாழ்ப்பாணம்)

அம்புலன்ஸ் வண்டி நோயாளிகளை ஏற்றிவர கட்டணம் அறவிடுவதாக நோயாளிகள், நோயாளர் நலன் புரிச்சங்கத்திடம் புகார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 25-ம் திகதி முல்லைத்தீவு வைத்தியசாலையில் இருந்து அம்புலன்ஸ் வண்டி மூலம் க. இரத்தினம், நா. தனலிங்கம் ஆகியோர் ஆலங்கேணிப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டனர். இவர்களை ஆலங்கேணிப் பகுதியில் இறக்கியதும் இவர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து 250/- ரூபாவை அம்புலன்ஸ் வண்டி சாரதி பெற்றுக்கொண்டுள்ளதாக நோயாளிகள் தெரிவித்துள்ள புகாரில் இருந்து தெரிய வருகிறது. இந்நோயாளிகள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்ததும் நோயாளர் நலன்புரிச் சங்கத்திடம் புகார் தெரிவித்துள்ளனர்.

(இ), (நி)

## ஆதாரம் காட்டிப் பெறவும்

உரும்பிராய் கற்பக பிள்ளையார் வீதியில் தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டு, ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி பெறவும்.

## தலைவர்

விடுதலைப் புலிகளின் பதில் கிடைத்ததும் யுத்த நிறுத்த திகதி அறிவிக்கப்படும் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் கொழும்பில் நடந்த வாராந்தர செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## யாழ் வன்னி தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப்பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகாமையிலும் உள்ள கருமபீடங்களிலும், ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கருமபீடத்திலும் செய்திகள் ஏற்கப்படுகின்றன.


1. **சலுகை செய்திகள்**முதல்15சொற்களுக்கும் ரூபா 15/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2/-ம் அறவிடப்படும்
2. **வழமைச் செய்திகள்** முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/-ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5/-ம் அறவிடப்படும்
3. **வியாபாரச் செய்திகள்** முதல்10 சொற்களுக்கு ரூபா 200/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/-ம் அறவிடப்படும்

(மேற்கூறப்பட்ட 1,2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா100/-ம், 3ற்கு ரூபா 200/-ம் அறவிடப்படும்)

## யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்
## தடை நீக்கம்

இனிப்பு வெதுப்பி, பணிஸ், கேக் (அடைகேக் உட்பட) போன்ற ஆடம்பர உற்பத்திகளுக்கு விதிக்கப்பட்ட தடை 12-12-94 நாளை **திங்கட்கிழமை** முதல் நீக்கப்பட்டுள்ளது ...

# வங்காலையில் 3 புலிகள் வீரச்சாவு



கப்டன் மரகதன்



லெப். பாண்டு



2-ம் லெப். ராகபவான்

# புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

நேற்று அதிகாலை வங்காலையில் இராணுவ தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| ரி. 56 - 2 | - 01 |
| ரி 56 - 1 | - 01 |
| ரி. 81 | - 01 |
| 40 எம். எம். பிஸ்ரல் | - 01 |
| ஐ எம். ரவை | - 1157 |
| ஏ. கே. மகசின் | - 05 |
| ரி. 81 மகசின் | - 04 |
| 40 எம். எம். ஷெல் | - 03 |
| கிரனைட் | - 01 |
| ஏ.கே.எல்.எம்.ஜி. கோள்சர் | - 04 |
| ஏ. கே. கோள்சர் | - 02 |
| ஏ. கே. எல். எம். ஜி. லிங் | - 50 |
| மில்ரி பாக் | - 01 |
| தண்ணீர்க் கான் கோல்சர் | - 13 |
| தண்ணீர் கான் | - 03 |
| சிவில் சப்பாத்து (சோடி) | - 05 |
| ஹெல்மட் | - 03 |
| மில்ரி சப்பாத்து (சோடி) | - 07 |

# இந்திய மீனவரின் கத்திக்குத்திற்கு இலக்காகிய பேசாலைவாசி பலி

இந்திய மீனவரின் கத்திக் குத்துக்கு இலக்காகி மன்னார் மீனவர் ஒருவர் பலியாகியுள்ளார் இச்சம்பவம் பேசாலைக் கடற்பகுதியில் இடம் பெற்றுள்ளது

இதில் வேறு இரு மன்னார் மீனவர்களும் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தகராறு பற்றி மேலும் தெரியவருவதாவது, பேசாலைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன் பிடித்தவேளை, மன்னார் மீனவர்கள் அவர்களை துரத்தியுள்ளனர். இதனையடுத்து இந்திய மீனவர்கள் தம்மைத்துரத்திய மன்னார் மீனவர்களை தாக்கியுள்ளனர் இதிலேயே மன்னாரைச் சேர்ந்த மீனவர் ஒருவர் பலியாகியதாக தெரியவருகின்றது.

## இந்திய சிறிலங்கா உறவு விரிவாக்க இணக்கம்

இந்தியாவும் சிறிலங்காவும் இருதரப்பு நட்புறவை மேலும் விஸ்தரிக்க இணங்கியுள்ளன. வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் புதுடில்லி சென்று வந்தமை இருதரப்பு உறவை பலப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை கதிர்காமர் கொழும்பு திரும்பினார். இந்திய பிரதமருடன் அமைச்சர் கதிர்காமர் விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

சந்திரிகா குமாரதுங்காவிற்கு பொதுமக்கள் தேர்தலில் வழங்கிய தீர்க்கமான ஆணையும் சமாதானத்தில் வடபகுதி மக்களுக்கு உள்ள விருப்பும் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்பதை பிரதிபலிப்பதாக இந்தியப் பிரதமர் ராவ் குறிப்பிட்டிருந்தார்.

## இராணுவம் - ரெலோ கூட்டாகச் சுற்றிவளைப்பு
### மூன்று தமிழ் மக்கள் கைது

மட்டக்களப்பு மாவட்டம் பாவற்கொடிச்சேனை ஆனையூத்திடல் பகுதியில் நேற்று முன்தினம் வீடொன்றை சுற்றி வளைத்த இராணுவத்தினரும் ரெலோ தேசத்துரோகிகளும் மூன்று அப்பாவித் தமிழர்களை பிடித்துச் சென்றுள்ளனர்.

நிலைபற்றி மேலதிக விபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

## இளைஞர் சுட்டுக்கொலை

வாழைச்சேனை விபுலானந்தா வீதியில் வைத்து

சொல்லுக்கும் ரூபா 15/-ம் அறவிடப்படும்


(மேற்கூறப்பட்ட 1,2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா100/-ம், 3ற்கு ரூபா 200/-ம் அறவிடப்படும்)

அவசர கட்டணம் அறவிடப்படும் மேற்குறிப்பிட்ட செய்திகள் உடன் விநியோகிக்கப்படும்.

மேலதிக விபரங்களை அந்த அந்த கருமபீடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-10872)

## ஆண்டிரண்டு ஆனதுவோ.....



மலர்வு
03-06-1915

உதிர்வு
03-11-1992

### அமரர் சூரியன் வேலுப்பிள்ளை

(சந்தம்புளியடி காரைநகர்)

அன்பின் திருவுருவே! ஆண்டிரண்டு ஆனதுவோ?
பண்பின் சிகரமே! பாசத்தின் பிறப்பிடமே!
இன்புற்று நாம் வாழ என்றுமே வைத்தவரே!-இன்று
அன்பான நெஞ்சங்கள் அலை கடலாய்
- பொங்குவதேன்?

மனைவி, மக்கள்,
சுதுமலைதெற்கு, மருமக்கள், பேரப்பிள்ளைகள்
ஆனைக்கோட்டை, பூட்டப்பிள்ளைகள்.

(10365)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இனிப்பு வெதுப்பி, பணிஸ், கேக் (அடைகேக் உட்பட) போன்ற ஆடம்பர உற்பத்திகளுக்கு விதிக்கப்பட்ட தடை 12-12-94 நாளை திங்கட்கிழமை முதல் நீக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

மா தட்டுப்பாடு ஏற்பட்ட காலப்பகுதியில் மக்களின் நன்மை கருதி கூடுதல் வெதுப்பியை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் விதிக்கப்பட்ட தடைக்கு ஒத்துழைப்பு கொடுத்த சகல வெதுப்பக உரிமையாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாவட்ட தலைவர்,
யாழ். மாவட்ட வெதுப்பக
உரிமையாளர் சங்கம்,
183, ஆடியபாதம் வீதி,
(சி-10893) திருநெல்வேலி.

## 2-வது வாரத்தை நோக்கி

யாழ் **ஸ்ரீதர்** அகலத்திரையில்

தினசரி பிற்பகல்:- 2. 30, 4. 30, 6. 30
சனி, ஞாயிறு காலை 10. 30.
பிற்பகல்:- 2. 30, 4. 30, 6. 30

விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகமும்
நிதர்சனமும் இணைந்து
திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராஜனின்

# "பிஞ்சு மனம்"

(வர்ண முழு நீளப்படம்)

திரைப்பட பிரியர்களுக்கு மற்றுமோர்
அரிய திரைவிருந்து "பிஞ்சு மனம்"
தமிழீழ திரைவானில்
உலாவி வருகின்றது "பிஞ்சு மனம்"
தமிழீழ மக்கள்
பார்த்து மகிழ "பிஞ்சு மனம்"
(சி-10888)

தீர்வு காணப்படவேண்டும் என்பதை பிரதிபலிப்பதாக இந்தியப் பிரதமர் ராவ் குறிப்பிட்டிருந்தார்.

### வங்காலை

- கப்டன் மரகதன் / திலீப் (முத்துசாமிசந்திரகுமார், மட்டக்களப்பு)
- லெப். பாண்டு/ஜெயந்தன் (யாக்கோபு மரியகிறிஸ்ரின், மன்னார்)
- 2-ம் லெப். ராகபவான் (மரியதாஸ் பத்திநாதன், மன்னார்)

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மூன்று போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### வவு. கல்வி

செய்யும்படியும் வேண்டினர்.

இந்த எம்பிக்களின் கோரிக்கையை அடுத்து மன்னார் மாவட்ட கல்விப்பணிப்பாளர் பசீரை வவுனியாவிற்கு நியமனம் செய்வதற்கு கல்வி அமைச்சர் சிபார்சு செய்த சமயம், வவுனியா மாவட்ட கல்வி அதிகாரிகளும் முப்பதுக்கு மேற்பட்ட பாடசாலை அதிபர்களும் கையெழுத்திட்டு திரு. நவரட்ணராஜாவை தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்குமாறு அமைச்சருக்கு கோரிக்கை விடுத்தனர்.

இதன் பிரகாரம் இம்மாதம் 15ஆம் திகதி வரையும் இந்த இடமாற்றம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் கல்வி அதிகாரிகளுக்கும் வன்னி மாவட்ட எம். பிக்களுக்கும் இடையே பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. புளொட் எம். பி ஒருவரின் உதவியாளர் கல்வி அதிகாரி ஒருவரை வவுனியா நகரில் வைத்து மிரட்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுஇவ்வாறிருக்க யு. என். பியின் வன்னி எம். பி திருமதி ராஜமனோகரி புலேந்திரன் இந்த சர்ச்சை எவற்றிலும் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (தி,பா,இ)

சுற்றி வளைத்த இராணுவத்தினரும் ரெலோ தேசத்துரோகிகளும் மூன்று அப்பாவித் தமிழர்களை பிடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் மதியழகன் சின்னவி சுது ஆகிய மூன்று தமிழர்களே கைது செய்யப்பட்டு உன்னிச்சை இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்களது

## இளைஞர் சுட்டுக்கொலை

வாழைச்சேனை விபுலானந்தா வீதியில் வைத்து இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன் தினம் இரவு 10. 30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

### ஐந்து நட்சத்திர

எந்நேரமும் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்பதாலும் வர்த்தகர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறப்படுகின்றது எனவும் ஐலண்ட் தெரிவித்துள்ளது.

இதேவேளை பம்பலம்பிட்டி துன்முல்லைச் சந்திக்கருகாமையில் அமைந்திருந்த விமானப்படைத் தலைமையகம் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகலாம் எனவே அதனை இடமாற்றுமாறு ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் வேண்டுகோள் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது,

இதையடுத்தே விமானப்படைத் தலைமையகத்தை இடம்மாற்ற அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

## மரண அறிவித்தல்

### செபஸ்ரியாம்பிள்ளை பர்ணாந்துப்பிள்ளை
(செல்லத்துரை)

மாதகல் தோமையர் கோவிலடியை பிறப்பிடமாக கொண்டவரும் தற்போது மானிப்பாயை வசிப்பிடமாக கொண்டவருமான செ. பர்ணாந்துப்பிள்ளை 10-12-94 இறைவனடி சேர்ந்தார். அன்னார் மேரிமாகிறெற்றின் அன்புக் கணவரும், யேசுநாயகம், வாசமலர், இராஜநாயகம் (சுண்டுக்குழி), செல்வக்குமார் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற மிக்கேல்பிள்ளை, மேரி இம்மாகுலேற்றா, அல்வீனம்மா, றாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், புஸ்பாகரன், றூபினி, சறோஜினி, நொயலின், விஜித்தா, நிலானி, ஜெனிங்ஸ், சுதர்ஷ்னி, சுகந்தினி, ஜான்சன், யோகராஜா, ஜெயா ஆகியோரின் அன்புப் பேரனும், றஜீவன், றொசானியா, பபிஸ்ரா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை (11- 12- 94) பிற்பகல் 3 மணிக்கு பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. யேசுநாயகம்
(மகன்)

சந்தை வீதி,
மானிப்பாய். [10368]